# அத்துரலிய பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, அத்துரலிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 8,171,715 தொகை நாட்குறிப்பு 24 இன் மூலம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டிற்கான செலவினங்களின் நாட்குறிப்பு 23 இன் மூலம் மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்காக வரவு மற்றும் செலவு பதிவுகள் செய்யப்பட்டமையால் ரூபா 246,192 இனால் ஆண்டிற்கான செலவுகள் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 4,799,830 தொகைக்கான நிலையான சொத்துக்களின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த இரண்டு நிர்மாண வேலைகளுக்காக மூலதனக் கடன் கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 189,287 தொகை மிகையாக செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்தியிருந்த ரூபா 155,940 தொகைக்கான கணக்காய்வு கட்டணம் மீளாய்வாண்டிற்காக செலவுகள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சம்பளமற்ற மற்றும் அரைச்சம்பள விடுமுறைகள் தொடர்பாக ஊழையர் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 419,015 தொகை ஏனைய உதவிகள் என நிதிக்கூற்க்களில் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான 02 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மூலதன உதவிகள் மற்றும் கடன்பட்டோர் ரூபா 173,419 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் ரூபா 4,731,774 தொகை குறைவாக காட்டப்பட்டதை சரிசெய்வதற்காக ரூபா 5,535,945 தொகை பிழையாக சீராக்கல் செய்யப்பட்டமையால் திரண்டநிதிய மற்றும் முத்திரை கட்டணம் கடன்பட்டோர் ரூபா 10,267,719 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கிற்கு ரூபா 9,455,204 தொகை மற்றும் ரூபா 1,595,077 தொகை பிழையான முறையே வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டிற்கான தளபாடங்கள் உபகரணங்கள் ரூபா 857,649 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையை சரி செய்வதற்காக மிகைகள் மற்றும் பற்றாக்குறை கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 64,511,386 தொகைக்கான 13 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 5,805,574 தொகைக்கான இணக்கமின்மைகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 22,431,683 தொகைக்கான மூலதன உதவி கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 92,618 தொகைக்கான 04 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 03 வருட காலத்தை மிகைத்துள்ள ஆதனக் கடன் வட்டி பெறுமதி ரூபா 218,134 தொகை ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 28,475,005 தொகைக்கான மூலதன உதவி கடன் கொடுத்தோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 248,438 தொகைக்கான 04 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) பிரதேச சபைகளை நிறுவப்பட்ட போது உரித்தாக்கப்பட்ட ஆதனங்களுக்காக அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 675,577 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதியிலும் தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 116,236,822 தொகைக்கான 13 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டிருந்தது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 59 | சபையின் அதிகார பிரதேசத்தில் கைத்தொழில்கள் தொடர்பாக கணக்கீடு ஒன்று மேற்கொண்டி ருக்கவில்லை. |
| (ii) விதி 145 | திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து பேரேட்டில் காணப்படும் மீதியுடன் இணக்கஞ் செய்திருக்கவில்லை. |
| (iii) விதி 165 | நாட்குறிப்பு பதிவுகள் சரியான முறையில் பிரதான பேரேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளை சரியான முறையில் சமப்படுத்தி இருக்கவில்லை. |
| (iv) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறைகள் தொடர்பான காரணங்களுடன் சமர்த்திருக்கவில்லை. |
| (v) விதி 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது வருடாந்த கணிப்பீடு நடாத்தப்பட்டி ருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 371(2)(ஆ) | 2018 ஜூன் 30 திகதி வரை தீர்க்கப்படாதிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 40,000 ஆக காணப்பட்டது. |
| (ii) | நி.பி. 1645 மற்றும் 1646 | 09 வாகனங்கள் தொடர்பான ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,350,434 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,661,952 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,332,050 | 1,866,640 | 1,656,434 | 1,106,932 | 1,305,500 | 1,206,272 | 1,229,111 | 896,726 |
| வாடகை | 4,751,000 | 260,250 | 255,115 | 17,538 | 4,293,000 | 3,397,330 | 3,434,127 | 12,403 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 214,100 | 166,220 | 167,720 | 1,085 | 162,100 | 194,385 | 192,235 | 2,585 |
| ஏனைய வருமானங்கள் | 7,892,500 | 14,181,458 | 21,812,734 | 7,012,581 | 6,222,300 | 9,105,686 | 2,496,060 | 14,643,857 |
| மொத்தம் | 14,189,650 | 16,474,568 | 23,892,003 | 8,138,137 | 11,982,900 | 13,903,673 | 7,351,533 | 15,555,571 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 14,189,650 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 16,474,568 ஆக காணப்பட்டது. ரூபா 15,555,571 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 32,030,139 எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 23,892,003 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 8,138,137 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### வீதவரி

ஆரம்ப மீதி ரூபா 896,726 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,866,640 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 2,763,366 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,656,434 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,106,932 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப மீதி ரூபா 12,403 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 260,250 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 272,653 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 255,115 தொகையாக இருந்தமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 17,538 இற்கான நிலுவை மீதியொன்று காணப்படுகின்றது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 233,800 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,443,636 தொகை ஆகக் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

பிரதேச சபை சட்டத்தில் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 11 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் சபையின் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகள் அனைத்திற்குமாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

2017 ஆண்டிற்காக சபை நிதியம் மற்றும் மூலதன உதவிகளின் மூலம் ரூபா 119,751,000 தொகைக்கான 130 வேலை திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மதிப்பீடு செய்திருந்த போதிலும் அவ்வேலை திட்டங்கள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) மூலதன வேலை திட்டங்கள் நிறைவேற்றுதல்**

ஆண்டிற்காக ஒட்டுமொத்த மதிப்பீட்டு மூலதன செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 121,467,750 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் கிரயம் ரூபா 30,276,402 தொகையாகும். 02 நிகழ்ச்சித் திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ள முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. பொதுமக்கள் பயன்பாட்டு சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது மூலதன செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

2013 ஆண்டு முறை 2017 ஆண்டு இறுதி வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 17,301,194 தொகை செலவிடப்பட்டிருந்தது. திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்தும் தொடர்பாக தனியார் அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்காததுடன், 1526 வீதவரி செலுத்தும் அலகுகளில் இருந்து ஒரு வாரத்தில் 08 தொன் குப்பை வகைப்படுத்தப்படாமல் சேகரிக்கப்பட்டு சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் குவிக்கப்பட்டு காணப்படாது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவை பணிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட 04 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் 09 தொகைக்கான மிகையும் காணப்பட்டது.

(ஆ) திறைசேரி செயலாளரின் 2014 மார்ச் 31 திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 03/2014 இன் பிரகாரம் முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மற்றும் பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவலகங்கள் செயலாளரின் 2014 நவம்பர் 12 திகதிய நிருவாக சுற்றறிக்கை 25/2014 சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியுடன் இணக்கமின்றி நாளாந்த மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 4 ஊழியர்களுக்காக 2015 ஏப்ரல் மாதம் முதல்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ரூபா 968,847 தொகையொன்று சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 பெறுகை**

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஆண்டின் போது நிர்மாண வேலைகள் மற்றும் பண்டங்கள் சேவைகள் வழங்குவதற்காக ரூபா 32,514,539 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 05 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 2,757,503 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 03 செலவு விடயங்களில் ரூபா 138,963 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 92 வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 05 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 27,092,493 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 22 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களின் பெறுமதி ரூபா 1,000,000 தொகை எனினும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு வரையினை மிகைத்திருந்த தொகை ரூபா 557,171 ஆகும்.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு